# எழுதி வளர்ந்த இயக்கம்

**தி**ராவிட இயக்கம், அதன் சிந்தனைகள், சாதனைகள் ஆகியவற்றைத் தாங்கி ஏராளமான புத்தகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றை எப்படித் தேர்வு செய்வது, எந்தப் புத்தகத்தைப் படிப்பது என்பதை அறிவுரைக்கிறது இந்தத் தொடர்...

■ பேராசிரியர் சுப.வீரபாண்டியன்


23

## திராவிடத்தால் வாழ்ந்தோம்!

**எ**ந்த திராவிடம் இந்த மண்ணை வாழ வைத்ததோ, எந்த திராவிடம் நம் மக்களுக்கு உணர்வூட்டியதோ, எந்த திராவிடம் நம் பிள்ளைகளுக்கெல்லாம் கல்வியைப் பொதுவாக்கியதோ அந்த திராவிடத்தால்தான் நாம் வீழ்ந்தோம் என்று தம் நெஞ்சறிய ஒரு பொய்யை இங்கே பரப்புகிறவர்களை நம் காலத்தில் நாம் பார்க்க நேர்ந்திருக்கிறது.

இந்தச் சூழலில், **கவிஞர் மனுஷ்யபுத்திரன், 'திராவிடத்தால் வாழ்ந்தோம்'** என்று ஓர் அரிய நூலை எழுதியிருக்கிறார். சென்னையில் உள்ள 'உயிர்மை பதிப்பகம்' வெளியிட்டுள்ள இந்நூல், நம் இயக்கத் தலைவர்களின் பெருமைகளைப் பற்றியும், தற்கால அரசியல் பற்றியும் பேசுகிறது.

இந்நூலில் மொத்தம் 33 கட்டுரைகள் உள்ளன. அவற்றுள் முதல் ஐந்து கட்டுரைகள் தலைவர் கலைஞரைப் பற்றியன. அடுத்த ஐந்து கட்டுரைகள், இன்றைய நம் கழகத்தின் தலைவர் தளபதி பற்றியன. மீதமுள்ள 23 கட்டுரைகள் சமகால அரசியல் குறித்தன. இந்நூல் 2017-ஆம் ஆண்டு வெளிவந்தது என்பதால், அந்தக் காலகட்டத்தில் நடைபெற்றவற்றைப் பற்றிக் கூடுதலாகப் பேசுகிறது.




### ஓயாத அலையும் பேரியக்கமும்

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரைப் பற்றிய கட்டுரைகளில் ஒன்றுக்கு, எழுத்தாளர் மனுஷ்யபுத்திரன் **'என்றும் ஓயாத அலை'** எனத் தலைப்பிட்டு இருக்கிறார். எத்தனை பொருத்தமான தலைப்பு. ஆம், கலைஞர் என்றும் ஓயாத அலை, வீழாத மலை.

அவர் தமிழ்நாட்டு அரசியலை மட்டுமின்றி, ஒரு கட்டத்தில் இந்திய அரசியலையும் இயக்கியவர். சமூக நீதியின் அடிப்படையில் இந்த நாட்டைக் கொண்டு செல்வதற்கு முயன்றவர். அதனால்தான் ஐந்து கட்டுரைகளில் ஒன்றுக்கு, **'தேசியத் தலைவர்'** என்றும், இன்னொன்றுக்கு **'சமூக நீதியின் சரித்திர நாயகர்'** என்றும் தலைப்பிடப்பட்டுள்ளார்.

அதேபோல, தளபதியைப் பற்றிய ஐந்து கட்டுரைகளில் ஒன்றுக்கு, **'புத்தகப் பேரியக்கம்'** என நூலாசிரியர் தலைப்பிட்டுள்ளார். 2017-ஆம் ஆண்டு மார்ச் 1-ஆம் தேதி அன்று, தன்னுடைய பிறந்த நாளில், 'தன்னை வாழ்த்த வரும் கட்சியினர், நண்பர்கள் அனைவரும், பொன்னாடைகள், பூங்கொத்துகளுக்குப் பதிலாக **புத்தகங்களோடு வாருங்கள்**' என்று அவர் அறிவித்திருந்தார். அந்த நடைமுறை இன்றும் தொடர்கிறது.

இது பெரும் அறிவிப்பு மட்டுமல்ல, படிக்கும் பழக்கத்துக்கான மறுமலர்ச்சி என்றும் சொல்லலாம். இன்றும் தொடரும் அந்த மரபின் காரணமாக, ஒவ்வொரு ஆண்டும் அவர் பிறந்த நாளில் வந்து குவியும் புத்தகங்களை, அவர் கழகத்தின் நூலகங்களுக்குக் கொடுத்து வருகிறார். அதன் மூலம் கட்சியினரைப் படிக்கத் தூண்டுகிறார்.



மனுஷ்யபுத்திரன்

### பேரியக்கம் செய்த விந்தை

திராவிட இயக்கம் தொடங்கிய நாளிலிருந்து, ஒவ்வொரு ஊரிலும் ஒரு கிளை ஏற்பட்ட மறுகணமே, ஒரு படிப்பகம் உருவாகிவிடும். அந்தப் படிப்பகம்தான் நம் இயக்கத்தின் பாலபாடங்களை, அன்றாட அரசியல் செய்திகளை உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்லும். சில ஆண்டுகளுக்கு முன்பு நான் பஹ்ரைன் சென்றிருந்தபோது, தளபதி அவர்கள் அனுப்பி வைத்த நூல்களை, அங்கு அவர்கள் ஒரு நூலகமாகவே ஆக்கி வைத்திருக்கும் காட்சியினைக் கண்டு மகிழ்ந்தேன். ஆம், நம் தளபதி அவர்கள் தொடக்கி இருப்பது, ஒரு புத்தகப் பேரியக்கம்தான்.

இப்போது எண்ணிப் பார்த்தால், இந்தப் பேரியக்கம் இன்னொரு விந்தையைச் செய்திருப்பதையும் உணர முடிகிறது. அந்தப் புத்தகங்கள் அவருக்கு வந்த பரிசுகள் மட்டும் இல்லை. எழுத்தாளர்களுக்கும் பதிப்பாளர்களுக்கும் புத்தகப் பிரியர்களுக்கும் அவர் கொடுக்கும் பரிசு என்றுதான் சொல்ல வேண்டும்.

> “**அ**ந்தப் புத்தகங்கள் அவருக்கு வந்த பரிசுகள் மட்டும் இல்லை. எழுத்தாளர்களுக்கும் பதிப்பாளர்களுக்கும் புத்தகப் பிரியர்களுக்கும் அவர் கொடுக்கும் பரிசு என்றுதான் சொல்ல வேண்டும்.”

### படிக்கவும் பரப்பவுமான நூல்

இந்நூலில் உள்ள மற்ற 23 கட்டுரைகள், 2017-ஆம் ஆண்டினையொட்டி, தமிழக, இந்திய அரசியலில் நடைபெற்றவற்றைப் பற்றிய பார்வைகளும், விமர்சனங்களும்.

சென்னை, ஆர். கே. நகரில் நடைபெற்ற ஓர் இடைத்தேர்தல் பற்றிய ஒரு கட்டுரை, நூலில் இடம் பெற்றுள்ளது. அந்தத் தேர்தல் முடிவு, மனுஷ்யபுத்திரனுக்கு ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. ஜனநாயகம் மீட்கப்படுமா என்று கவலையோடு அதில் அவர் ஒரு கேள்வியை எழுப்பி இருக்கிறார். காலம் விடை சொல்லிவிட்டது. அது வெறும் தற்காலிகமான நிகழ்வுதான் என்பதை, இன்று தமிழக அரசியல் மெய்ப்பித்திருக்கிறது. 2021-ஆம் ஆண்டில் ஜனநாயகம் மீட்கப்பட்டிருக்கிறது.

விவசாயிகள் போராட்டம் பற்றி, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பற்றி, திட்டமிட்டுத் தி.மு.க.வுக்கு எதிரான வெறுப்பு அரசியல் பரப்பப்படுவது பற்றி என்று பல்வேறு செய்திகள் குறித்த கட்டுரைகள் நூலில் இடம் பெற்றுள்ளன. அ.தி.மு.க. என்பது ஒரு மூழ்கும் கப்பல் என்பதை, ஆறு ஆண்டுகளுக்கு முன்பே அவர் தெளிவாகக் கணித்திருக்கிறார். 'நீட் தேர்வு' எப்படி மோசடியானது என்பது நூலின் இறுதிக் கட்டுரையாக இடம்பெற்றுள்ளது.

படிக்கப்படவும், பரப்பப்படவும் வேண்டிய நூலாக இந்நூலை நாம் பார்க்கலாம்!

**-வாசிப்போம்**

---

## திராவிட இயக்க இதழ்கள் - 'திராவிடன்'

**தி**ராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களில் ஒருவரான என்.வி.நடராசன் அவர்கள் ஆசிரியராக இருந்து நடத்திய இதழ் **'திராவிடன்'**. இந்த வார இதழ், 1949-ஆம் ஆண்டு முதல் 1966-ஆம் ஆண்டு வரை வெளிவந்தது.


திராவிடன்
சவுண்டிகளுக்கு சவுக்கடி

இந்த இதழை, தி.மு.கழகத்தின் கொள்கைப் பிரசார இதழாக நடத்திட, அறிஞர் அண்ணா அவர்கள் தனது **'சந்திர மோகன்'** நாடகத்தை சென்னை ஒற்றைவாடை நாடக அரங்கில் நடத்தி நிதி திரட்டிக் கொடுத்ததாக **'இதழியல் கலை அன்றும் இன்றும்'** என்ற நூலின் ஆசிரியர் புலவர் என்.வி.கலைமணி கூறுகிறார். அவர் 1950-ஆம் ஆண்டில் அந்த இதழில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

திராவிட இயக்கத்தைக் கட்டி எழுப்பிய தளகர்த்தர்களை அறிமுகப்படுத்தும் தொடர் ஒன்றை தோழர் கோ.குமாரசாமி என்ற மயிலாடுதுறைக்காரர், **'திராவிடப் பித்தன்'** என்ற பெயரில் எழுத, அதைத் தனது இதழில் வெளியிட்டார் நடராசன்.

இதழின் முகப்புப் பக்கத்தில் **'திராவிடன்'** என்ற எழுத்துகள் தொடக்கக் காலங்களில் கருப்பு நிறத்திலும் அல்லது கருப்புப் பின்னணியில் வெள்ளை நிறத்திலும் எழுதப்பட்டுள்ளன. பின்னாளில், தி.மு.க. கொடி நிறத்தில், அந்த எழுத்துகளின் மேல் பாதி கருப்பு நிறத்திலும், கீழ்ப் பாதி சிவப்பு நிறத்திலுமாக அச்சடிக்கப்பட்டுள்ளன. முகப்புப் பக்கத்திலேயே தலையங்கங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அதேபோல 60-களில் வந்த இதழ்களின் அட்டைப் படங்களை பேரறிஞர், கலைஞர், இவர்களுடன் என்.வி.நடராசன் ஆகியோரின் புகைப்படங்கள் அலங்கரிக்கின்றன.

---

## :ப்ளாஷ்பேக்






பொன்முடி

### திராவிடவியல் பட்டயம்!

**1997**-ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், தலைவர் கலைஞர், பேராசிரியர், ஆற்காட்டார், நாஞ்சிலார் முன்னிலையில் **'திராவிட இயல் மாணவர்'** பட்டயத்தை, தலைவர் கலைஞர் அவர்களின் கையால் பெற்றேன். 24 வயது இளைஞனாக, திராவிட இயக்க வரலாறு பற்றிப் படித்து, தேர்ச்சி பெற்று, தலைவரிடம் 'இந்த வயசிலேயே இப்படியான பட்டம் பெற்றதுக்கு வாழ்த்துகள்' என்ற பாராட்டையும் பெற்றதை இன்று நினைத்தாலும் மன மகிழ்வினைத் தருகிறது.

**-இரா.பொன்முடி, மாவட்டப் பிரதிநிதி, இராயபுரம், சென்னை வடக்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## உண்மையான வீரன்!



**க**டந்த வாரம் சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள லுசேன் நகரத்தில் சர்வதேச அளவிலான தடகளப் போட்டிகள் நடைபெற்றன.

அதில், 'ஈட்டி எறிதல்' விளையாட்டில், இந்தியாவின் சார்பாக கலந்துகொண்ட ஒலிம்பிக் தங்கப் பதக்க வீரர் நீரஜ் சோப்ரா முதலிடம் பெற்று நாட்டுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார். கடந்த மே மாதம், தோஹாவில் நடைபெற்ற போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற பிறகு, காயம் காரணமாக வேறு எந்தப் போட்டியிலும் கலந்துகொள்ளாமல் இருந்தார். தற்போது உடல் நலம் தேறி, மீண்டும் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

2020-ஆம் ஆண்டில் டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின் போது, இவரது ஈட்டியைப் பயிற்சிக்காகப் பயன்படுத்தி, அவரது தங்கப் பதக்கக் கனவை பாகிஸ்தான் வீரர் அர்ஷத் நதீம் முயன்றார் என்று இந்தியாவிலிருந்து குற்றச்சாட்டு எழுந்தது. அந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தது வேறு யாருமல்ல, இங்குள்ள சில இந்துத்துவக் கைக் கூலிகள்தான். அப்போது நதீமுக்கு ஆதரவாகப் பேசியதுடன், 'உங்கள் அழுக்கு அரசியலுக்கு என் பெயரைப் பயன்படுத்தாதீர்கள்' என்று காட்டமாக பதிலடி கொடுத்தார்.

தொடர்ந்து, சில வாரங்களுக்கு முன்னர் மல்யுத்த வீரர்களுக்கு ஆதரவாகவும் பேசினார். கிரிக்கெட் உள்ளிட்ட வேறு பல விளையாட்டு வீரர்கள், மல்யுத்த வீரர்களின் போராட்டத்தின்போது அமைதி காத்தபோது, நீரஜ் தைரியமாக முன் வந்து அந்தப் போராட்டத்துக்கு ஆதரவு கொடுத்தது, பலரின் புருவங்களை உயர்த்தியது.

தற்போது அவர் பதிவு செய்திருக்கும் வெற்றியைத் தொடர்ந்து, 'முதுகெலும்புள்ள உண்மையான விளையாட்டு வீரன்' என்று நெட்டிசன்கள் பாராட்டி வருகிறார்கள்.


---

## கருவூலம் கலைஞர் பயணம்

**1945-ஆம் ஆண்டு, புதுச்சேரியில் 'திராவிடர் கழக மாநாடு' நடைபெற்றது. அங்கு திராவிட இயக்க மேடைகளில் நாடகம் நடத்தி வந்த கலைஞர், அந்த மாநாட்டுப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். பெரியார், அண்ணா, அழகிரிசாமி உள்ளிட்ட தலைவர்கள் மாநாட்டுக்கு வருகை தந்தனர். காலையில் மாநாடு நடைபெற்ற நேரத்தில், “திராவிடத் தலைவர்களே திரும்பிப் போங்கள்” என பெரும் கூட்டம் திரண்டு வந்து தாக்குதல் நடத்தியது. தலைவர்களைப் பத்திரமாக அனுப்பிவிட்டு, வந்த கலைஞரை, ஒரு கும்பல் கடுமையாகத் தாக்கியது. இறந்துவிட்டார் எனத் தூக்கி எறிந்துவிட்டுச் சென்ற நிலையில், யாரோ காப்பாற்றி, பெரியாரிடம் கொண்டு வந்து சேர்த்தனர். அவரைக் காணாது தவித்த பெரியார் , கையோடு ஈரோட்டுக்கு அழைத்துக் கொண்டார்.**

---

## திராவிடத்தால் வாழ்ந்தோம் 168




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21-23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131